# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081081

1. District : திருப்பூர் மாவட்டம் | PS: ல.ஒ.த.க.பி. திருப்பூர் காவல்நிலையம் | Year: 2024 ஆண்டு | FIR No.: 01/AC/2024 மு.த.அ. எண் | Date: நாள் 04.01.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 | Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 13.12.2023 at 18.30 hrs, 28.12.2023 at 14.00 hrs, 29.12.2023 at 12.40 hrs 03.01.2024 at 18.15 hrs & 19.15 hrs

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.01.2024 | Time : நேரம் 21.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
   கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், மிட்டா நாச்சியால் வருவாய் கிராமம், திருப்பூர் வட்டம், திருப்பூர் மாவட்டம். சுமார் 10 கி.மீ தென்கிழக்கு

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. கலைச்செல்வி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. வேலுக்கான்

   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 32/2024 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Team Leader, INFOSYS, Bangalore | (g) Address : முகவரி 1/67, பூசாரிக்காட்டார் கிராமம், மிட்டா நாச்சியால் அக்ரஹாரம், திருப்பூர் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. வெங்கடேசன், கிராம நிர்வாக அலுவலர், மிட்டா நாச்சியால் வருவாய் கிராமம் திருப்பூர் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seprate Sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

V. Lokesh

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

[signature] 04/01/2024

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

05.01.2024 at 10.15 hrs

Name: பெயர் G. PERUMAL.
Rank: நிலை INSPECTOR OF POLICE, V&AC, DHARMAPURI No. எண் ........

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/AC/2024, u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி .

******

இன்று 04.01.2024-ஆம் தேதி 21.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், மிட்டாநூலஅள்ளி அஞ்சல், பூசாலிக்கொட்டாய் கிராமம், கதவு எண்.1/67 என்ற முகவரியைச் சேர்ந்த வேங்கான் மகன் திரு.V.கணேசமூர்த்தி என்பவர் அலுவலகம் வந்து எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

நான் தருமபுரி மாவட்டம், மிட்டாநூலஅள்ளி பூசாலிக்கொட்டாய் கிராமத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் பெங்களூரில் உள்ள Infosys நிறுவனத்தில் Team Leader–ஆக பணிபுரிந்து வருகிறேன். மிட்டாநூலஅள்ளி கிராம சர்வே எண்.274/10–ல் 0.7.50 ஹெக்டேர் நிலம் UDR பட்டா எண்.1039-ன்படி எனது தாத்தா பச்சியப்பன் த/பெ.திரு.காளியப்பன் பெயரில் இருந்தது. அந்த நிலம், எனது மூதாதையர் வழி வந்த சொத்தாகும். ஆனால், கடந்த 20.02.2001–ஆம் தேதி பட்டா எண்.1039–ல் உரிமையாளர்கள் 1) காளியப்பன் மகன் பச்சியப்பன், 2) ஜடையன் (எ) பச்சியப்பன் மகன் கமலேசன் என்று இரண்டு பெயர்களில் கூட்டாக மாறியுள்ளது. தவறுதலாக ஜடையன் (எ) பச்சியப்பன் மகன் கமலேசன் என்ற பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. அவருக்கும், எங்கள் நிலத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. மிட்டாநூலஅள்ளி கிராம பட்டா எண்.1039–ல் தவறாக சேர்க்கப்பட்டுள்ள ஜடையன் (எ) பச்சியப்பன் மகன் கமலேசன் பெயரை நீக்குவது தொடர்பாக ஆலோசனை கேட்க கடந்த 12.12.2023 ஆம் தேதி மாலை 06.00 மணிக்கு மிட்டாநூலஅள்ளி VAO திரு.வெங்கடேசன் அவர்களை எனது செல்போன் எண்.7353534864 லிருந்து அவரது செல்போன் எண் 8838594537 க்கு தொடர்பு கொண்டேன். ஆனால் அவர் போனை எடுக்கவில்லை. உடனே அவர் எனது செல்போனுக்கு தொடர்பு கொண்டு பேசினார். நான் பெயர் நீக்கம் குறித்து கேட்டேன். அதற்கு அவர் 13.12.2023–ஆம் தேதி டாக்குமெண்ட் எல்லாம் எடுத்துக்கொண்டு தருமபுரி தாலுக்கா ஆபிஸ் வருமாறு என்னிடம் சொன்னார். எனக்கு 13.12.2023 ஆம் தேதி அவசர வேலையிருந்த காரணத்தால் டாக்குமெண்டை அன்று காலை சுமார் 9.00 மணிக்கு எனது அம்மா திருமதி.இராஜேஸ்வரி அவர்களிடம் கொடுத்து அனுப்பினேன். அவர்களும் டாக்குமெண்டை தருமபுரி தாலுக்கா ஆபிஸில் VAO திரு.வெங்கடேசனிடம் கொடுத்துவிட்டு வந்தார். VAO திரு.வெங்கடேசன் அவர்கள் அன்று மாலை சுமார் 6 மணியளவில் அவரது

செல்போன் எண் 8838594537 லிருந்து எனது செல்போன் எண் 7353534864–க்கு தொடர்பு கொண்டு, என்னை தருமபுரி கலெக்ரேட்டுக்கு நேரில் வரச்சொன்னார். நானும் மாலை சுமார் 6.30 மணியளவில் தருமபுரி கலெக்ரேட்டுக்கு சென்று அவரை பார்த்தேன். அப்போது, VAO திரு.வெங்கடேசன் அவர்கள் டாக்குமெண்ட் எல்லாம் பார்த்துவிட்டேன். நான் பட்டாவிலிருந்து பெயர் நீக்கம் செய்ய ஏற்பாடு செய்கிறேன். அதற்கு ரூ.25,000/- தனக்கு தனியாக கொடுக்க வேண்டுமென்று என்னிடம் கேட்டார். நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லையென்று சொன்னேன். அதற்கு அவர், ரூ.5,000/– குறைத்து ரூ.20,000/– கொடு என்று சொன்னார். பின்னர், என்னிடம் தருமபுரி RDO ஆபிசில் மேற்படி பெயர் நீக்கம் செய்வது சம்மந்தமாக மனு ஒன்றை கொடுக்குமாறும் கூறினார். மேலும், RDO ஆபீஸ் வேலையையும், பெயர் நீக்கம் சம்மந்தமான வேலைகளையும் அவரே செய்து கொடுத்துவிடுவதாக சொன்னார். நான் என்னிடம் தற்போது பணம் இல்லையென்று சொன்னேன். அதற்கு அவர் பணத்தை ரெடி செய்துவிட்டு சொல்லுமாறு கூறி சென்றுவிட்டார். அவர் சொன்னபடி எனது அப்பா பெயரில் கடந்த 19.12.2023-ஆம் தேதி பெயர் நீக்கம் சம்மந்தமாக மனு ஒன்றை தருமபுரி RDO ஆபிசில் கொடுத்தேன். பின்னர், 28.12.2023–ந்தேதி எனது மாமா திரு.கமலகண்ணன் அவர்கள் நிலத்தில் வழிப்பிரச்சனை சம்மந்தமாக நிலத்தை அளக்க VAO திரு.வெங்கடேசன் அவர்கள் வந்துள்ளதாக தகவல் தெரிந்து, நான் நேரில் VAO திரு.வெங்கடேசன் அவர்களை அன்று மதியம் சுமார் 2 மணிக்கு சந்தித்தேன். அப்போது, அவரிடம் எனது தாத்தா பெயரில் உள்ள பட்டாவில் பெயர் நீக்கம் சம்மந்தமாக RDO ஆபிசில் மனு கொர்டுத்த விவரத்தை சொன்னேன். அதற்கு அவர் தான் ஏற்கனவே கேட்ட ரூ.20,000/–ஐ கொடுக்குமாறு கேட்டார். அப்போதுதான் வேலை முடித்து தரமுடியுமென்று என்னிடம் சொன்னார். பின்னர் மறுநாள் 29.12.2023–ஆம் தேதி மதியம் சுமார் 12.40 மணிக்கு நான் VAO திரு.வெங்கடேசன் அவர்களை எனது செல்போன் எண் 7353534864–லிருந்து அவரது செல்போன் எண்.8838594537–க்கு தொடர்பு கொண்டு பட்டாவில் பெயர் நீக்கம் சம்மந்தமாக கேட்டேன். அப்போது, அவர் தான் கேட்ட பணத்தை ரெடி செய்துவிட்டாயா என்று கேட்டார். எனக்கு பணம் கஷ்டமாக உள்ளதென்று கூறினேன். அதற்கு பணத்தை ரெடி செய்தால்தான் பட்டாவில் பெயர் நீக்கம் செய்யமுடியும் என்று முடிவாக சொல்லிவிட்டார். பின்னர், 03.01.2024–ஆம் தேதி மாலை சுமார் 06.15 மணிக்கு நான் எனது செல்போன் எண்ணிலிருந்து VAO வுக்கு போன் செய்து, எனது தாத்தா பெயரில் உள்ள பட்டாவில் பெயர் நீக்கம் குறித்து கேட்டேன். அதற்கு VAO பணம் ரெடி செய்துவிட்டாயா என்று கேட்டார். அதற்கு நான் சீக்கிரம் ஏற்பாடு செய்வதாக சொன்னேன்.

அன்றே மாலை சுமார் 7.15 மணிக்கு அவரது செல்போன் எண்.8838594537–லிருந்து எனது செல்போன் எண். 7353534864–க்கு missed call கொடுத்தார். நான் உடனே எனது செல்போனிலிருந்து *VAO* அவர்களை தொடர்பு கொண்டபோது, அவர் தனக்கு அவசரமாக ரூ.20,000/- தேவைப்படுவதாகவும் எப்படியாவது ஏற்பாடு செய்யுமாறு கேட்டார். அதற்கு நான் தற்போது என்னால் பணத்தை ஏற்பாடு செய்யமுடியவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பணம் கொடுக்கவில்லையென்றால் வேலை முடித்து தரமுடியாதென்றும், பணத்தை ஏற்பாடு செய்து கொண்டு வெள்ளிக்கிழமை காலை தனக்கு போன் செய்யுமாறும் தான் சொல்லும்படி பணம் கொடுக்குமாறும் சொன்னார். எனவே அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.20,000/–த்தை கொடுத்து எனது வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. அதனால், நாளை 05.01.2024–ந்தேதி வெள்ளிகிழமை அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.20,000/–த்துடன் அவரை சந்திக்க தயாராக உள்ளேன். அதனால் மிட்டாநூலஅள்ளி *VAO* திரு.வெங்கடேசன் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் V.கணேசமூர்த்தி, 04.01.2024. Sir, Received the written report on 04.01.2024 at 21.00hrs and further, after making a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally, was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his complaint is genuine. Therefore, a case in Dharmapuri V&AC, Cr.No.01/AC/2024, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered today 04.01.2024 at 21.45hrs against the accused. The original FIR and the complaint of the informant is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

04/01/2024

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.